நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 194/2023

## P.W. 2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சண்முகம் |
| தந்தை / கணவர் பெயர் | : | சாமிநாதன் |
| கிராமம் | : | பொட்டனேரி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 2 |
| வயது | : | 44 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 10–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.30)

1. நான் தற்போது மேட்டூர் வட்டம் பொட்டனேரி கிராமம் காட்டுரில் குடியிருந்து ஆட்டோ டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி பிரகாஷை எனக்கு தெரியும். அவர்கள் விருதாசம்பட்டியில் குடியீருந்து வருகிறார்கள். அ.சா.1 பொன்னுசாமியும் எனக்கு தெரியும்.

2. சுமார் 3 வருடத்திற்கு முன்பாக காலை 09.00 மணியளவில் நான் என்னுடைய ஆட்டோவில் செங்கரடு என்ற இடத்திற்கு லோடு கொண்டுசென்றுவிட்டு வீட்டிற்கு வருவதற்காக திரும்பி வரும்போது முனியப்பன் கோவில் அருகே சண்டைப்போடுவது போல் சத்தம் கேட்டது. நான் வண்டியை நிறுத்திவிட்டு அங்கே சென்றபோது பொன்னுசாமியும், அவருடன் இரண்டும் பையன்களும் பிரகாஷ் என்பவரை அடித்துக்கொண்டிருந்தார்கள்.

3. பிரகாஷ் மருத்துவமனைக்கு செல்வதாகவும், மற்ற இருவர் காவல் நிலையம் செல்வதாகவும் கூறினார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**மேற்படி சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

4. பொன்னுசாமி எனக்கு தெரியும். தேவகி மற்றும் செங்கோடன் தரப்பினரை எனக்கு தெரியும். நண்பர்களா என்றால் பழக்க வழக்கம். அவர்கள் நண்பர்கள் என்பதால் தான் மேற்படி தேவகி, பிரகாஷ் மற்றும் செங்கோடன் கெட்டவார்த்தைகளால் பொன்னுசாமி வகையறாக்களை திட்டி அடித்ததை பார்த்துவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-(01.40.P.M.)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**